www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 10

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2022 - 23

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் 50

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 8X1=8

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது --------
   (அ) திருக்குறள் (ஆ) புறநானூறு (இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
2. 'மனக்கோட்டை' என்ற மரபுத்தொடருக்கான பொருளைத் தேர்க.
   (அ) கற்பனை செய்தல் (ஆ) பெரிய கோட்டை கட்டுதல்
   (இ) வேலையைத் தள்ளிப் போடுதல் (ஈ) அதிகமாக செலவு செய்தல்
3. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் -----
   (அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது (ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   (இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் (ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
4. மேன்மை தரும் அறம் என்பது ------
   (அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
   (ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   (இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
5. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் -------
   (அ) நாட்டைக் கைப்பற்றல் (ஆ) ஆநிரை கவர்தல்
   (இ) வலிமையை நிலைநாட்டல் (ஈ) கோட்டையை முற்றுகையிடல்
6. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
7. 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் நூலை எழுதியவர்
   அ) மார்ஷல் ஏ. நேசமணி ஆ) ம. பொ. சிவஞானம் இ) மங்கலங்கிழர் ஈ) தீரர் சத்தியமூர்த்தி
8. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ------
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

### பகுதி - 2

**அ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** 5x2=10
**(15 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

9. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
10. 'மயங்கிய' – இச்சொல்லிற்கான பகுபத உறுப்பிலக்கணத்தை எழுதுக.
11. குறிப்பு வரைக. – அவையம்
12. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.
13. **கலைச்சொல் தருக.**
    1. Document 2. Belief
14. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:**
    1. ம.பொ.சி. சொற்பொழிவுகளைக் கேட்டதன் விளைவாக இலக்கிய அறிவு பெற்றார்.
    2. அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.
15. 'பொருள்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பகுதி - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** 3X3=9

16. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள்,



Shot on Y15
Vivo AI camera
2022.11.17 11:29

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆலூர் மூலங்கிழார் தமது பாடலில் குறிப்பிட்டிருக்கிறார்.

வினாக்கள்:

1. போர் அறம் என்பது யாது?
2. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்று குறிப்பிடுபவர் யார்?
3. யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று புறப்பாடல் கூறுகிறது?

17. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

18. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் தலைப்பினை எழுதி, அகர வரிசைப்படுத்தி எழுதுக.

19. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் – இத்திருக்குறளை அலகிட்டு வாய்பாடு காண்க.

20. அடிபிறழாமல் எழுதுக.

"தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

(அல்லது)

"மாற்றம் எனது மானிடத் தத்துவம்" எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

## பகுதி – 4

3X5=15

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

21. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு சுருக்கமாக எழுதுக.

22. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி, ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.

23. நமது வரலாற்றுச் சின்னங்களான கட்டடங்கள், சிலைகள், கல்வெட்டுகள் போன்றவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் நீங்கள் செய்யும் ஐந்து செயல்களைப் பட்டியலிடுக.

24. காட்சியைக் கண்டு கவிதை எழுதுக.



25. மொழிபெயர்க்க:

Among the five geographical divisions of the Tamil Country in sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

## பகுதி – 5

எதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்க. 1X8=8

26. அரசியல் அறம், கொடை, வாய்மை, உதவி ஆகிய அறக்கருத்துகளைப் பாடப்பகுதியிலிருந்து தொகுத்து எழுதுக.

27. கடின உழைப்பாளர் – சிறப்பு மிக்கவர் – போற்றத்தக்கவர் என்ற நிலைகளில் உங்களுக்குத் தெரிந்த பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து எழுதுக.

28. முன்னுரை – நான் விரும்பும் தலைவர் – நாட்டு முன்னேற்றத்தில் தலைவரின் பங்கு – முடிவுரை.
கொடுக்கப்பட்ட குறிப்புகளைக்கொண்டு ஒன்றரைப் பக்க அளவில் கட்டுரை ஒன்று எழுதுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593